முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.
இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு
இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.
துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 733**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**01.10.2021**, வெள்ளிக்கிழமை

1. தர்ம சக்தியே அரங்கா போற்றி
தரணிகாத்திட வந்த தேசிகா போற்றி
ஆறுமுகன் என் சூட்சுமமாகவே வாழும்
அரங்கனே குருராஜனே போற்றி போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
புகலுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
ஆற்றல்பட அரங்கன் தர்மத்தின் வழி
அகிலம் மாறும் எனக் கூறி இனிதே
3. இனிதே உலகமக்களை நோக்கி
ஏழாம் படைவீட்டின் சக்தி நிலைகளை குறித்தும்
குறித்துமே சுப்ரமணியர் யானும் குறையில்லா அரங்கன் தர்மபலம் மெச்சி
நெறிபிறழாவண்ணம் அரங்கன் சன்மார்க்கத்தை நிலவுலக மக்கள் ஏற்று வருதல் காண
4. காணவே கலியுகம் தானும் கட்டாயம் மாற்றம் கண்டு ஞானயுகமாக
ஞான தேசிகன் அரங்கன் அருளாலும் தயவாலும்
நன்மைமிக்க ஞான பூமியாக உருவெடுத்து
நாட்டிடுவேன் கலியுகம் மாற்றம் பெறும்
5. மாற்றம் தரவந்த மாதவசி அரங்கன்
மக்களை காக்க வந்த மகாயோகி ஞானதேசிகன்
ஆற்றலை ஆறுமுகன் யான் கூட்டிவர
அரங்கனே நம்பி வரும் மக்கள் படை மூலம் அகிலமே பெருமாற்றம் பெற்று
6. பெற்றுமே பேருலகம் அரங்கஞானி அவதார நோக்கமாக
பிசகில்லா ஞான சித்தர் ஆட்சி காலத்தை அடையும்
அடையவே அரங்கனுக்கு அனுதினமும் ஆக்கம்
ஆறுமுகன் தொடர்ந்து வழங்கி வர
7. வரங்கள் பெற உலகோரே அரங்கன் குடில் நோக்கி வாரீர்
வடிவேலன் யான் அரங்கன் கரம்பட அருளி
வையகத்தாரை காத்து ஞான ஆட்சிக்குண்டான
அருளாசி தந்து துணைபுரிவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–